# ECHO OF HIS CALL

ECHO OF HIS CALL
REACHING NATIONS
SINCE 1969
1969 TO 2020

# அழைப்பின் எதிரொலி

Tamil
₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXX | YEAR OF OUR LORD JESUS CHRIST, 2025 OCTOBER | No. 10


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 29:1- 9

1. பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்.
2. கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்.
3. கர்த்தருடைய சத்தம் தண்ணீர்களின் மேல் தொனிக்கிறது; மகிமையுள்ள தேவன் முழங்குகிறார்; கர்த்தர் திரளான தண்ணீர்களின்மேல் இருக்கிறார்.
4. கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது; கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது.
5. கர்த்தருடைய சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது; கர்த்தர் லீபனோனின் கேதுரு மரங்களை முறிக்கிறார்.
6. அவைகளைக் கன்றுக்குட்டிகளைப் போலவும், லீபனோனையும் சீரியோனையும் காண்டாமிருகக் குட்டிகளைப் போலவும் துள்ளப்பண்ணுகிறார்.
7. கர்த்தருடைய சத்தம் அக்கினி ஜுவாலைகளைப் பிளக்கும்.
8. கர்த்தருடைய சத்தம் வனாந்தரத்தை அதிரப்பண்ணும்; கர்த்தர் காதேஸ் வனாந்தரத்தை அதிரப் பண்ணுகிறார்.
9. கர்த்தருடைய சத்தம் பெண்மான் களை ஈனும்படி செய்து, காடுகளை வெளியாக்கும்; அவருடைய ஆலயத்திலுள்ள யாவரும் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபிக்கிறார்கள்.

## உங்கள் ஆசீர்வாதமான எதிர்காலத்திற்கு ஏழு இரகசியங்கள்!!



சகோதரி ஏஞ்சல்



மாதந்தோறும் **அழைப்பின் எதிரொலி பத்திரிகையின்** மூலம் உங்களைச் சந்திப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நமது கர்த்தருடைய கிருபையால் நீங்கள் அனைவரும் நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். இப்போது நம்மில் சிலர் மனப்போராட்டத்தில் காணப்படலாம். ஆனால், நீங்கள் இந்தப் பத்திரிகையைப் படிக்க கையில் எடுத்திருப்பது விசுவாசத்தின் ஒரு படியாகும். தேவன் இன்னும் சிங்காசனத்தில் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எல்லாம் முடிந்தது என்று அவர் சொல்லும் வரை ஒன்றும் முடிந்துவிடவில்லை.


கடந்த சில வாரங்களாக, 'உன்னைக் காத்துக் கொள்' என்ற சொற்றொடர் என் இதயத்தில் தொடர்ந்து ஒலித்த வண்ணம் இருந்து வருகிறது. நான் அதைப் படித்துச் சிந்திக்கத் தொடங்கினேன். அந்த எண்ணங்களில் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நம்மை நாமே காத்துக் கொள்ள வேதாகமம் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. பாதுகாப்பது என்றால் விழிப்புடன் இருப்பது, எச்சரிக்கையாக இருப்பது, நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறிந்திருப்பது என்று அர்த்தமாகும். நாம் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டிய சில முக்கியமான பகுதிகளை காண்போம்.

### 1. உங்கள் இருதயத்தைக் காத்துக் கொள்ளுங்கள்!

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.** நீதிமொழிகள் 4:23

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....

அழைப்பின் எதிரொலி!

கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்

நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

ECHO OF HIS CALL
REACHING NATIONS
SINCE 1969
1969 TO 2029

# ECHO OF HIS CALL - (Marching towards 60th year)



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Dr. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
Ex MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A, M.Sc(C&P), PGDHRM, MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc, M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech, M.Tech, (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.

EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org
YOUTUBE CHANNEL
Echo of His Call

... என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன். சங்கீதம் 42:11

கர்த்தருக்குள் அன்புள்ள நண்பர்களே!

நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்!

நம்முடைய சிறப்புத் தன்மையை வெளிக் கொண்டுவர தேவன் நம் வாழ்வில் சில கடினமான காலங்களை அனுமதிக்கிறார் என்பது உண்மை. சங்கீதம் 42–ல்கூட தாவீது அப்படி ஒரு சூழ்நிலையில் இருக்கிறார். மலைகளில் இருந்து வனாந்தரத்திற்கும், பள்ளத்தாக்குகளில் இருந்து நதிக்கரைகளுக்குமாக தாவீது அலைந்து கொண்டிருக்க நேர்ந்தது. அவரது இருதயம் கலங்கின நிலையில் இருந்தது. அவரது ஆவி அமைதி இல்லாமல் திகைத்துக் கொண்டு இருந்தது. ஆனால், தேவன் மேல் நம்பிக்கை வைக்கும்படி தன் ஆத்துமாவை ஆழ்ந்த நம்பிக்கையுடன் அவர் மிகவும் கட்டாயப்படுத்துகிறார்.

ஆழ்ந்த நம்பிக்கை என்பது வேதனையிலும் தேவனைத் துதித்தல், குழப்பத்தின் மத்தியிலேயும் தேவனை விசுவாசித்தல், போராட்டங்களில் மத்தியிலும் கர்த்தருக்குள் களிப்படைதல், காரிருளின் மத்தியிலும் தேவனுடைய உண்மையை அறிக்கையிடுதல் ஆகும். இது என்னுடைய அனுபவமாக இருக்கிறதினால் இதன் மூலம் ஆண்டவர் உங்களோடுகூட பேசுவார்.

நம்பிக்கை வேராக இருக்கும் என்றால் அதன் கனி துதியாக மாறும். துதி நம்பிக்கையின் வேரை ஆழப்படுத்துகிறது. உங்களை ஏமாற்றமடையச் செய்யும் சூழ்நிலையை இன்று நீங்கள் சந்தித்துக் கொண்டு இருந்தால் நீங்கள் உங்கள் நம்பிக்கையில் இருந்து விலகாதீர்கள்! விட்டுக் கொடுக்காதீர்கள்!! தைரியம் கொள்ளுங்கள்!!! **தேவன் மேல் நம்பிக்கை வையுங்கள்.** நான் தேவனை எப்படி நம்புவது ? என்று நீங்கள் என்னிடம் கேட்பீர்கள் என்றால் தாவீது என்ன செய்தாரோ அதையே உங்களுக்கு நான் சொல்வேன்.

நான் இன்னும் அவரைத் துதிப்பேன். வியாதியானாலும் சரி அவரைத் துதியுங்கள். ஒரு பெரிய பணத்தொகையை நீங்கள் இன்னொருவருக்குக் கொடுக்க வேண்டியது உள்ளதா ? அது கடைசி நாளா ? நீங்கள் நன்றியோடு அவரைத் துதியுங்கள். தேவன் உங்கள் முகத்தை அவமானத்திலிருந்து நிச்சயமாகவே காப்பார். எல்லாம் நன்றாக இருக்கும்போது தேவனை துதிப்பது நன்றி உணர்வு. எதுவுமே நன்றாக இல்லாதபோதும் தேவனை நன்றாக துதிப்பது அவர்மேல் உறுதி கொண்டிருப்பதன் அடையாளமாகும். அப்பேர்ப்பட்ட உத்தமமான மனிதனை பார்க்குபோது தேவனுடைய முகம் பெருமையோடு பிரகாசிக்கிறது. இது தாவீதின் வாழ்வில் நடந்தது. தேவன் தாவீதின் எதிரிகளை முறியடித்து இழந்த எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்தார். யோபுடைய வாழ்க்கையிலேயும் தன்னுடைய எல்லாவற்றையும் யோபு இழந்தாலும், தன்னுடைய வாழ்க்கையில் கடைசியில் எல்லாவற்றையும் இரட்டிப்பாகப் பெற்றுக் கொள்கிறார். அந்த நேரத்திலே வேதம் சொல்லுகிறது. ... **கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார்.** யோபு 42:9. அது போலவே நிச்சயமாக உங்களுக்கும் செய்வார். மனுஷரை நம்புவது விருதா. கர்த்தரில் நம்பிக்கையாய் இருங்கள். உங்களுக்கு நன்மை உண்டாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய ஊழியங்கள் அனைத்தையும் ஆண்டவர் அதிகமாக ஆசீர்வதித்து வந்திருக்கிறார். கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். எனக்குத் தேவைகள் எதுவும் இல்லை. நான் தாழ்ச்சி அடைவதில்லை. **கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.** சங்கீதம் 23:1.

குறைவு பெற்ற மக்கள் மத்தியிலே நான் ஒருவனாக இருப்பதில்லை என்கிற விசேஷ அபிஷேகத்தை என்மேலேயும், உங்கள் மேலேயும் ஆண்டவர் இந்த மாதத்தில் வைப்பார். **அழைப்பின் எதிரொலி ஊழியங்களை** நினைத்துக் கொள்ளுங்கள். ஊக்கமாக எங்களுக்காக ஜெபம் செய்யுங்கள். உங்களால் இயன்ற உதவிகளை இந்த ஊழியத்திற்குச் செய்யும்படி உங்களை அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். பொருளாதார ஒத்துழைப்பையும் இந்த ஊழியத்தில் கொடுக்கும்படி உங்களைப் பட்சமாய் கேட்டுக் கொள்கிறேன்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியன்,**

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ▢ BIBLECOR - Postal Courses (3 languages) ▢ YouTube Ministry ▢ Online Courses ▢ Theological Correspondence Courses (2 languages) ▢ Church Planting ▢ Nehemiah Bible Colleges ▢ Gospel Printing Press ▢ Great Commission Partners ▢ St. Paul's Matriculation School ▢ Crusades ▢ Community Development

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

இருதயம் என்பது எபிரெய மொழியில் 'லெப்' ஆகும். இது நமது விருப்பங்கள், எண்ணங்கள் மற்றும் உணர்வுகளின் இருப்பிடத்தைக் குறிக்கிறது. நாம் சிந்தித்து, பகுத்தறிந்து, முடிவுகளை எடுக்கும் இடமாகும். அதனால்தான் இருதயத்தைப் பாதுகாப்பதை வேதாகமம் வலியுறுத்துகிறது. ஏனென்றால், நமது இருதயத்தின் நிலை நமது முழு வாழ்க்கையின் போக்கையும் வடிவமைக்கிறது.

நாம் யார் என்பதை நமது இருதயம் வரையறுக்கிறது. நாம் உயிர் வாழ மிகவும் முக்கியமான உறுப்பாகிய இருதயத்தை புரிந்து கொள்வது கடினம். இதனால்தான், தாவீது, "தேவனே, என்னை ஆராய்ந்து பாரும்" என்று ஜெபித்தார். ஏனெனில், இருதயம் சிக்கலானதாகவும், ஏமாற்றும் தன்மையுடனும், முடிவெடுக்க முடியாததாகவும் இருக்கலாம். சிருஷ்டிகரால் மட்டுமே அதை உண்மையிலேயே ஆராயவும், அதன் மறைந்திருக்கும் துன்மார்க்கத்தை அம்பலப் படுத்தவும், சுத்தப்படுத்தவும் முடியும்.

தேவன் நம் இருதயத்தின் பாவத்தை மட்டுமல்ல, அது சுமக்கும் வலியையும் வடுக்களையும் காண்கிறார். **கர்த்தாவே, என்னைப் பரீட்சித்து, என்னைச் சோதித்துப்பாரும்; என் உள்ளிந்திரியங்களையும் என் இருதயத்தையும் புடமிட்டுப் பாரும்** என்று சங்கீதம் 26:2 ல் சங்கீதக்காரன் அறிவிக்கிறது போல் நமது நோக்கங்களும், செயல்களும் எப்போதும் ஒத்துப் போவதில்லை. நமக்குச் சரியாகவும், தூய்மையாகவும் தோன்றுவது கர்த்தரின் பார்வையில் முற்றிலும் மாறுபட்டதாகத் தோன்றலாம். ஏனென்றால், **கர்த்தர் ஆவியை துலக்குகிறவர்.**

**கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும், செய்கைகளின் பலன்களுக்கும், தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்** என்பதை எரேமியா 17:10-ல் எழுதப்பட்ட வேத வசனங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன. அதனால்தான் நம் இருதயத்தை எது பாதிக்கிறது என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்திலின்று ஜீவஊற்று புறப்படும்** என்று நீதிமொழிகள் 4:23-ல் வேதாகமம் நம்மை ஊக்குவிக்கிறது. இதேபோல், **அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்**... என்று நீதிமொழிகள் 23:7 கற்பிக்கிறது.

அன்பான தேவபிள்ளைகளே, சமூக ஊடகங்கள், நீங்கள் படிக்கும் புத்தகங்கள், திரைப்படங்கள் அல்லது நண்பர்களுடன் நீங்கள் ஈடுபடும் உரையாடல்கள் மூலம் உங்கள் இருதயத்தில் என்ன நுழைகிறது என்பது குறித்து எச்சரிக்கையாகவும், விழிப்பாகவும் இருங்கள். இவை ஏற்படுத்தும் ஒவ்வொரு தாக்கமும் முக்கியமானது. ஏனென்றால், உங்கள் இருதயம்தான் இறுதியில் உங்கள் வாழ்க்கையின் திசையை வடிவமைக்கிறது.

## 2. உங்கள் வாயைக் காத்துக் கொள்ளுங்கள்!

வாய் என்று நாம் சொல்லும்போது, நாவும் இதில் அடங்கும். மேலும், அது ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம். **அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புதான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!** யாக்கோபு 3:5,6.

நம் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் ஒருவரின் வாழ்க்கையை உருவாக்கவும், சிதைக்கவும் செய்யும் வல்லமை உடையது. அதனால்தான் நம் வார்த்தைகளின் வல்லமையைப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியம்.

பல நேரங்களில், நாம் கோபத்தில் பேசுகிறோம், பின்னர் "நான் அதை அர்த்தப்படுத்தவில்லை" என்று கூறி நம்மை நாமே மன்னித்துக் கொள்கிறோம். பெரும்பாலும், நாம் மிகவும் நேசிக்கும் நபர்களை சாதாரணமாக எடுத்துக் கொள்கிறோம். அவர்களை நம் கோபம், விரக்தி மற்றும் ஏமாற்றங்களுக்கு ஒரு வழியாகப் பயன்படுத்துகிறோம். துரதிர்ஷ்டவசமாக , இது பெரும்பாலும் கடுமையான மற்றும் புண்படுத்தும் வார்த்தைகளாக வெளிப்படுகிறது.

எதிர்த்துப் போராட சக்தியற்ற ஒருவரிடம் நம் கோபத்தை எத்தனை முறை தவறாக காண்பித்திருக்கிறோம்? **தன் வாயையும், நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்** என்று நீதிமொழிகள் 21:23-ல் வேதாகமம் நம்மை எச்சரிக்கிறது. **கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும். என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்.** சங்கீதம் 141:3 என்று சங்கீதக்காரன் ஒரு அழகான ஜெபத்தையும் ஜெபித்தார். இதுவே, நம் ஜெபமாகவும் இருக்கட்டும். நம் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனத்தில் கொள்வோம்.

## 3. உங்கள் நடையைக் காத்துக் கொள்ளுங்கள்!

... **உன் நடையைக் காத்துக் கொள்** ... பிரசங்கி 5:1.

நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நம் இலக்கை வடிவமைக்கிறது. எனவே, நாம் கவனமாக நடப்பது மிக முக்கியம். நம் கால்களை எங்கு வைக்கிறோம், எந்த திசையில் செல்கிறோம் என்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

நாம் எங்கு செல்கிறோம், எந்த நோக்கத்திற்காக செல்கிறோம் என்பதிலும் விழிப்புடன் இருப்பது முக்கியம். பெரும்பாலும் நாம் அடியெடுத்து வைக்கும்பொழுது, நம் சொந்த பெலனையும், பெலவீனங்களையும் நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறோம். அத்தகைய ஒரு தவறான பாதையானது, தேவனிடத்திலிருந்து விலக்கி நம்மை வெகுதூரம் அழைத்துச் சென்றுவிடும் என்பதை நாம் உணரவில்லை. சில நேரங்களில், அங்கிருந்து திரும்பி வர பல ஆண்டுகள் கூட ஆகலாம். இத்தகைய தவறான பாதை நம்முடைய விலைமதிப்பற்ற நேரத்தை இழக்க வைப்பதுடன், வாழ்க்கைப் பாதையில் தேவனிடமிருந்து வரும் ஆசீர்வாதங்களை





## மிக அவசர செய்தி!

நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

எங்கள் முகவரி:

**ECHO OF HIS CALL,**
**10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India**
**Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org**

யும் பறித்து விடும். எனவே, நம் திட்டங்களை தேவனிடம் சமர்ப்பித்து, அவருடைய சித்தத்திற்கு ஏற்ப நம்மை ஒப்புக்கொடுப்பது ஞானமாகும்.

**மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும்; அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர்** என்று நீதிமொழிகள் 16:9 நமக்கு நினைவூட்டுவது போல அல்பாவும் ஒமெகாவுமாய் இருக்கிற நமது தேவன் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தையும் அறிவார். அவர் நமது வெற்றிகளையும், தோல்விகளையும் காண்கிறார். நாம் எல்லாவற்றையும் அவருடைய கைகளில் ஒப்படைக்கும்போது, அவருடைய திட்டங்கள் எப்போதும் நல்லவை என்பதை நாம் உறுதியாக நம்பலாம். ஏனென்றால், அவர் நம்மை ஆழமாக நேசிக்கிறார். அவர் நமக்காக தனது ஜீவனைக் கொடுத்து, மீண்டும் உயிர்த்தெழுந்தார். இப்போது அவருடைய விலையேறப்பெற்ற அன்பை விசுவாசிக்கும்படி அவர் நம்மை அழைக்கிறார்.

**உம்முடைய வார்த்தையிலே என் காலடிகளை நிலைப்படுத்தி, ஒரு அநியாயமும் என்னை ஆளவொட்டாதேயும்.** சங்கீதம் 119:133 என்பதே நமது ஜெபமாக இருக்கட்டும்.

உங்கள் இளமைப் பருவத்தில் உங்கள் வழிகளை கர்த்தருக்கு ஒப்புக் கொடுங்கள் என்று என் இளம் நண்பர்களாகிய உங்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இப்படி செய்வீர்களானால் ஒருபோதும் வருத்தப்படமாட்டீர்கள்.

## 4. பொருளாசைக்கு விலகிக் காத்துக் கொள்ளுங்கள்!

லட்சியத்திற்கும், பேராசைக்கும் இடையே மிக மெல்லிய கோடு உள்ளது. லட்சியம் ஆரோக்கியமானதாக இருக்கலாம். ஆனால், பொருளாசை தீமைக்கு ஏதுவானது. ... **பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல** ... என்று லூக்கா 12:15 ல் இயேசுவே எச்சரித்தார்.

ஆக்ஸ்போர்டு அகராதியில் பொருளாசையைக் குறித்து சொல்லப்பட்டிருப்பதைக் காண்போம். 'ஒருவருக்குத் தேவையானதை விட அதிகமான செல்வங்கள், உடைமைகள் அல்லது அதிகப்படியான அதிகாரத்தின் மேல் ஆசை அல்லது தேவையானதைவிட அதிகப்படியான உணவின் மீது ஆசை, பானத்தின் மேல் உள்ள ஆசை' என்று வரையறுக்கிறது. அதிகப்படியான ஆசை மற்றும் தேவையானதை விட, அதிகமான போன்ற வார்த்தைகளைக் கவனியுங்கள். இவை பொருளாசையிலிருந்து இலட்சியத்தை வேறுபடுத்துகின்றன.

மனரம்மியமாக (திருப்தி, மனநிறைவு) இருக்க வேதாகமம் நமக்கு கற்பிக்கிறது. மனரம்மியம் என்பது அதிக பொருளாசை கொண்டிருத்தல் அல்லது அதிக விருப்பத்திற்கு எதிரானது. **நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.** எபிரெயர் 13:5.

நாம் விரும்பும் அனைத்தையும் நம் கண்முன் வைத்திருப்பதன் அடிப்படையில் நமக்கு மனநிறைவு ஏற்படுவதில்லை. மாறாக, உலகத்தையும், அதன் அனைத்து செல்வங்களையும் தன் கரங்களில் வைத்திருக்கும் தேவனை அறிவதன் மூலம் மனநிறைவு வருகிறது. ஒவ்வொரு சூழ்நிலையையும் கட்டுப்படுத்தவும், எல்லாவற்றையும் நம் நன்மைக்காகச் செய்யவும் அவருக்கு வல்லமை உண்டு. அவர் **நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை** என்றும் வாக்குறுதி அளித்துள்ளார். அவர் நம்மை ஒருபோதும் பாதியிலேயே கைவிடமாட்டார். நிச்சயமாக நம்மைக் காப்பாற்றுவார். எனவே, நாம் அவரை முழுமையாக விசுவாசிக்கலாம்.

தேவன் தம்முடைய ஒரே குமாரனை நமக்காக ஒப்புக்கொடுத்து, பாவம் மற்றும் சாபத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவித்து அன்புகூர்ந்ததுபோல, நம் வாழ்வில் உள்ள ஒவ்வொரு தேவையையும் அவர் வழங்க மாட்டாரா? **தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?** ரோமர் 8:32.

அன்பான சகோதர, சகோதரிகளே, தைரியமாக இருங்கள்: அவர் யெகோவாயீரே. நமது தேவைகளைச் சந்திப்பவர். அவர் தம்முடைய மகிமையின் ஐசுவரியங்களின்படி நமது எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வல்லவர். அவரைப் பற்றிக் கொள்ளுங்கள். அவரை நம்புங்கள். அவர் தம்முடைய பரலோக மிகுதியால் உங்களை ஆசீர்வதிப்பார்.

நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய மிகப்பெரிய ஆபத்துகளில் ஒன்று பண ஆசை. ஏனென்றால், **பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது;** ... 1 தீமோத்தேயு 6:10. **பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை;** ... பிரசங்கி 5:10 ல் வேதம் நமக்கு நினைவூட்டுகிறது. செல்வத்தின் மீது வைக்கப்பட்டுள்ள இருதயம் ஒருபோதும் உண்மையிலேயே திருப்தி அடையாது.

தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். பணம் பிரச்சனை அல்ல. வாழவும், கடினமாக உழைக்கவும், நம் குடும்பங்களை பராமரிக்கவும் நமக்கு பணம் தேவை. ஆனால், பணத்தைத் தேடுவதால் நமது ஆவிக்குரிய வாழ்க்கை, நம் குடும்பம் அல்லது தேவனுடைய ராஜ்யத்திற்கான நமது உறுதிப்பாட்டை இழப்பது ஆபத்தானது. ஒரு வேலைக்காக நீங்கள் ஆண்டவருக்கான நேரத்தை தியாகம் செய்ய வேண்டியுள்ளது, அவருடனான ஐக்கியத்தைப் புறக்கணிக்க வேண்டியுள்ளது அல்லது அவருடன் நடந்து செல்வதை சமரசம் செய்ய வேண்டியுள்ளது எனில், அந்த வேலையை ஜெபத்துடன் மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
கல்வித்தகுதி : 10-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
Diploma in Theology
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)
உடனே அணுகவும் !
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 56 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org / இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1990

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் 2025 அக்டோபர் 19 முதல் நவம்பர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, படித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

### தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

அக்டோபர் 19 ⇨ உலகத்திலுள்ள வேதாகமம் மற்றும் கிறிஸ்தவ நூல்களை அச்சிடும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் தேவைகளை சந்தித்து வருவதற்காக ...

அக்டோபர் 20 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது உதவியாளர்களை பாதுகாத்து வருகிறதற்காக...

அக்டோபர் 21 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

அக்டோபர் 22 ⇨ இதர ஊழியங்களைத் தாங்கச் செய்த கிருபைக்காக...

அக்டோபர் 23 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவரையும் ஆசீர்வதித்து வருவதற்காக...

அக்டோபர் 24 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில்** உள்ள ஞாயிறு சிறுவர் பள்ளியில் புதிய மாணவர்கள் சேர்ந்து வரும் கிருபைக்காக...

அக்டோபர் 25 ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **வேதாகமக்கல்வி** முறைகளின் வளர்ச்சிகளுக்காக...

அக்டோபர் 26 ⇨ நமது ஊழியங்களைத் தாங்குபவர்களுக்காகவும், அவர்களது ஈடுபாட்டிற்காகவும்...

அக்டோபர் 27 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

அக்டோபர் 28 ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**, சுமூகமான முறையில் செயல்பட்டு வருகிற கிருபைக்காக...

அக்டோபர் 29 ⇨ தலைமைச்சபையில் வளர்ச்சியடைந்து வரும் வாலிபர் ஊழியங்களுக்காக...

அக்டோபர் 30 ⇨ களப்பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தின் மேல் சரீர சுகம் பொழிந்து வரும் கிருபைக்காக...

அக்டோபர் 31 ⇨ நமது தலைமைச் சபையில் நடைபெறும் ஆண்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

நவம்பர் 01 ⇨ கடந்த மாதத்தின் பொருளாதார மற்றும் ஆவிக்குரிய தேவைகளை சந்தித்த கிருபைக்காக...

நவம்பர் 02 ⇨ நமது சுவிசேஷத்தின் அச்சகத்தின் தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும் அதற்கு காரணமாயிருக்கும் திறமையான ஊழியர்களுக்காகவும்...

நவம்பர் 03 ⇨ நம்முடைய பன்முனை ஊழியங்களில் கர்த்தரின் வழிகாட்டுதலுக்காக...

### தேவனிடத்தில் ஜெபியுங்கள்

நவம்பர் 04 ⇨ நமது முழுநேர மற்றும் மாலை நேர **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** மாணவர்கள் நல்லொழுக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் விளங்க...

நவம்பர் 05 ⇨ உலக தேசங்களின் ஒற்றுமை மற்றும் சமாதானத்திற்காக...

நவம்பர் 06 ⇨ **அழைப்பின் எதிரொலியின்** தலைமைச் சபை மற்றும் கிளைச்சபையின் விசுவாசிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலனுக்காக...

நவம்பர் 07 ⇨ போதைப்பொருட்களின் அடிமைத்தனத்திலிருந்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாக்க வேண்டி ...

நவம்பர் 08 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்காக...

நவம்பர் 09 ⇨ உலகில் நடைபெற்றுவரும் குழந்தைக் கடத்தலை அகற்ற வேண்டி...

நவம்பர் 10 ⇨ அனைத்து கிறிஸ்தவ ஊழியங்களிலும் கர்த்தரின் வல்லமையான அற்புதங்கள், அதிசயங்கள் மற்றும் அடையாளங்கள் நடக்க வேண்டி...

நவம்பர் 11 ⇨ நமது பங்காளர்கள், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்காக...

நவம்பர் 12 ⇨ உலகில் பல்வேறு பகுதிகளில் நிலவும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வர வேண்டி...

நவம்பர் 13 ⇨ ஆண்டவரது இராஜ்யம் பூமியில் நிலைப்பட மேலும் கூடுதலான தரிசனங்களை நம்மிடத்தில் அருளவேண்டி...

நவம்பர் 14 ⇨ உலகில் பல்வேறு பகுதிகளில் நிலவும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரவேண்டி...

நவம்பர் 15 ⇨ உலகளாவிய களப்பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக வேண்டி ...

நவம்பர் 16 ⇨ அனைத்து நாடுகளுக்கும் தேவபயமுள்ள தலைவர்களை தந்து ஆசீர்வதிக்க வேண்டி...

நவம்பர் 17 ⇨ நம் ஊழியர்களுக்கான ஊதியங்கள், காகிதம், தபால், போக்குவரத்து ஆகியவற்றிற்கான பொருளாதாரத் தேவைகளை தேவன் சந்திக்க வேண்டி ...

நவம்பர் 18 ⇨ அனைத்து மக்களின் மனக்கண்களை கிறிஸ்துவுக்குள் ஒளிரச் செய்ய...

... 4–ம் பக்கத் தொடர்ச்சி

## 5. உங்களிடம் ஒப்படைக்கப்பட்டதைக் காத்துக் கொள்ளுங்கள்!

**ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு ...** 1 தீமோத்தேயு 6:20.

கர்த்தர் உங்களிடம் ஒப்படைத்த விஷயங்களைப் பற்றி சிந்தியுங்கள்! வெளிப்புற செல்வாக்கிலிருந்து அவற்றைப் பாதுகாக்க கவனமாக இருங்கள். அது உங்கள் குடும்பம், உங்கள் வேலை, உங்கள் நிதி, உங்கள் அழைப்பு, உங்கள் அபிஷேகம் அல்லது உங்கள் ஊழியமாக இருக்கலாம். உங்கள் வாழ்க்கையால் அவற்றைப் பாதுகாக்கவும்!

தனது ஒரு தாலந்தை மறைத்த வேலைக்காரனைப் போல நாம் இருக்கக் கூடாது. கர்த்தர் நம் கைகளில் கொடுத்ததை நாம் பெருக்க வேண்டும் என்று விரும்புகிறார். உங்களிடம் உள்ளதைப் பொக்கிஷமாகக் கருதி, அதை உண்மையாகப் பயன்படுத்துங்கள். அதே நேரத்தில், கர்த்தர் உங்களிடம் ஒப்படைத்ததை மற்றவர்களுக்குப் போதிப்பது முக்கியம். வேதம் கூறுகிறது: ... **நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.** – 2 தீமோத்தேயு 2:2.

அன்புள்ள நண்பர்களே, கர்த்தர் நமக்காகச் செய்ததை மற்றவர்களுக்குக் கற்பிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நம் குழந்தைகள், அடுத்த தலைமுறை மற்றும் நம்மைச் சுற்றியுள்ளவர்கள். அவரை மகிமைப்படுத்தத் தொடரும் ஒரு மரபை விட்டுச் செல்லுங்கள்.

## 6. நன்றாக ஓடி முடித்து வெகுமதியைப் பெற உங்கள் நடையைக் காத்துக் கொள்ளுங்கள்!

பலர் தங்கள் வாழ்க்கை என்னும் ஓட்டத்தை நன்றாகத் தொடங்குகிறார்கள். ஆனால், வழியில் எங்கோ கவனத்தை இழக்கிறார்கள். வலுவாக முடிப்பதற்கான திறவுகோல் ஒரு காரியத்தைத் தொடர்ந்து செய்வதே ஆகும். அது வேதாகமத்தைப் படிப்பது, ஜெபித்தல், ஊழியம் செய்தல் அல்லது நற்கிரியைகளைச் செய்வது என எதுவாக இருந்தாலும், நாள்தோறும் தொடர்ந்து செய்தலில் உண்மைத்தன்மை முக்கியமானது.

சமீபத்தில், நான் ஒரு இளைஞனைச் சந்தித்தேன். அவர் கிறிஸ்துவோடு நடப்பதை விரும்புகிறார். ஆனால், சமநிலையைப் பேணுவதற்கு சிரமப்படுவதாக என்னிடம் கூறினார். சில நாட்கள் அவர் ஆண்டவரோடு மிகவும் நெருக்கமாக உணர்கிறார். வேதாகமம் படிப்பது, ஜெபித்தல், ஆராதனை செய்தல் மற்றும் நற்செய்தி பாடல்கள் மற்றும் செய்திகளைக் கேட்பது என தேவ சமூகத்தில் தன் நேரங்களைச் செலவிடுகிறார். ஆனால், மற்ற நாட்களில், அவரது மனநிலை மிகவும் மோசமாக இருப்பதால், அவர் வேதாகமத்தைத் திறக்கவோ அல்லது அதைப் பற்றி சிந்திக்கவோகூட விரும்பவில்லை. இந்தப் போராட்டத்தை எப்படிக் கையாள்வது என்று அவர் என்னிடம் கேட்டார்.

உங்களில் சிலரும் அப்படித்தான் உணரலாம். நான் அவரிடம் சொன்னேன். இது ஒரு பொறி. நீங்கள் அதில் சிக்கக் கூடாது. இதிலிருந்து மீள்வதற்கான ஒரே வழி, ஒரு நோக்கத்துடன் நீங்கள் எடுக்கும் தீர்மானங்கள் ஆகும். அதாவது உங்கள் மனநிலை எப்படியிருந்தாலும், தொடர்ந்து உண்மைத்தன்மையில் நிலைத்திருந்து விடாமல் முன்னேறுவது ஆகும். சில நேரங்களில், நீங்கள் அதை விரும்பாவிட்டாலும், கண்டிப்பாக செயல்பட வேண்டும்.

சில நேரங்களில் நீங்கள் ஒரு நோக்கத்துடன் செயல்பட வேண்டும். நீங்கள் அதை விரும்புவதால் அல்ல, ஆனால் அது அவசியம் என்பதால். சில சமயம், நாம் நடிப்பது போல் தோன்றினாலும், உண்மையில் நாம் பயிற்சி செய்கிறோம். ஒரு காரியத்தைத் தொடர்ந்து செய்ய ஒழுக்கம் தேவை. ஒழுக்கம் ஒரு நோக்கமுடையதாக இருக்க வேண்டும்; இல்லையெனில், நாம் இலக்கைத் தவறவிடுவோம். அதனால்தான், நாம் எதைத் தொடங்கினாலும், அதை நாம் முழுமையாகச் செய்து முடிக்க வேண்டும் என்று வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது. ஏனென்றால், அப்போதுதான் நம் முயற்சிகளுக்கான பலனைப் பெற முடியும். **உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.** 2 யோவான் 1:8.

பந்தயத்தை உண்மையாக ஓட கர்த்தர் நம்மைப் பலப்படுத்துவாராக! அவர் நம்மை அழைத்த வேலையை முடிக்க அவர் நமக்கு உதவுவார். இதனால் அவர் எக்காள சத்தத்துடன் திரும்பி வரும்போது நமது வெகுமதியைப் பெற்றுக் கொள்வோம்!

## 7. தேவனுடைய வார்த்தையை எதிர்ப்பவர்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்!

இறுதியாக, தேவனுடைய ராஜ்யத்தை எதிர்ப்பவர்களுக்கு எதிராக நம்மைக் காத்துக் கொள்ள வேதம் நமக்குக் கற்பிக்கிறது. **நீயும் அவனைக்குறித்து எச்சரிக்கையாயிரு; அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்து நின்றவன்.** – 2 தீமோத்தேயு 4:15 என்று பவுல் தீமோத்தேயுவை எச்சரிக்கிறார்.

எல்லோரையும் நேசிக்கவும், பொறுமையாக இருக்கவும் வேதம் எப்போதும் நமக்குக் கற்பிக்கிறது. **கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்.** ரோமர் 12:18 – கிறிஸ்துவின் சரீரத்தின் (சபையின்) ஒற்றுமையைக் குலைப்பவர்களை சபையிலும், சமூகத்திலும் நாம் பொறுத்துக் கொள்ள நேரிடும். இருப்பினும், இங்கே பவுல் கர்த்தரின் வேதவசனத்திற்கும், ஊழியத்திற்கும் எதிராகச் செயல்படுபவர்களுக்கு எவ்வாறு உறுதியாக அறிவுறுத்துகிறார் என்பதைக் காண்கிறோம்.

நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், விழிப்புடன் இருக்கவும், கள்ளப்போதனைகளுக்கு எச்சரிக்கையாயிருக்கவும் பவுல் நமக்குக் கற்பிக்கிறார். வேதாகமம் ஏற்கனவே எச்சரித்தபடி, இந்த கடைசி நாட்களில், சத்தியத்தை அறிவிப்பதற்குப் பதிலாக மக்களின் மனதையும், விருப்பங்களையும் திருப்திப்படுத்த பல போதனைகள் வழங்கப்படுகின்றன.

தொடர்ச்சி 9–ம் பக்கம்.....


### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

# சிறப்பு நிகழ்ச்சிகள் !

## சாதனையாளர் விருதுகள்!

நமது சக ஊழியர்களான சகோதரிகள் நாகஜோதி, ஆக்னெஸ் மற்றும் C. மேரி மேக்தலின் ஆகியோருக்கு ஏப்ரல் 27, 2025 அன்று சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன. இவர்களின் விசுவாசம், கடின உழைப்பு மற்றும் தங்கள் பணிகளில் மற்றும் ஊழியங்களில் குறிப்பிடத்தக்க சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** மூலம் விருதுகள் வழங்கப்பட்டன.

## கௌரவ ஊழிய விருதுகள்!

உடன்ஊழியரான மூத்த வழக்கறிஞர் N. பாலாஜி, போதகர் மோதீஸ் வினோத் மற்றும் சகோதரி ஏஞ்சலின் செல்வ குமாரி ஹென்றி ஆகியோருக்கு ஆகஸ்ட் 10, 2025 அன்று முனைவருக்கான கௌரவ ஊழிய விருதுகள் வழங்கப்பட்டன.







**மூத்த வழக்கறிஞர் N. பாலாஜி, போதகர் மோதீஸ் வினோத் மற்றும் சகோதரி ஏஞ்சலின் செல்வகுமாரி ஹென்றி ஆகியோருக்கு ஊழியத்திற்கான கௌரவ விருது வழங்கப்பட்டது**

இந்த விருதுகள் மூலம் கர்த்தரின் ஊழியத்தில் இவர்களின் நேர்மை, விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பு சேவையை **அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்** அங்கீகரித்துள்ளன.

## அழைப்பின் எதிரொலி ஊழியங்களின் 57வது துவக்க விழா!

அழைப்பின் எதிரொலி ஊழியங்களின் 57வது ஆண்டு ஆரம்பத்தை நினைவுகூரும் சிறப்புக் கூட்டங்கள் ஆகஸ்ட் 10, 2025 அன்று நமது தலைமைச் சபையில் நடைபெற்றன. போதகர் டாக்டர் ஸ்டீபன் தேவகுமார் மற்றும் போதகர் டாக்டர் J. D. சார்லஸ் ஆகியோர் சிறப்பு செய்திகளை அளித்தனர். இக்கூட்டத்தில் கர்த்தரின் மகிமை வெளிப்பட்டது.



**போதகர் டாக்டர் ஸ்டீபன் தேவகுமார் மற்றும் போதகர் டாக்டர் J. D. சார்லஸ்**

## குழந்தைகள் பிரதிஷ்டை!

சகோதரர் மோகன் & சகோதரி ரேச்சல் – இவர்களின் மகன் ஜாபேஜ் ஜீவன் மற்றும் சகோதரர் சிம்சன் & சகோதரி எஸ்தர் – இவர்களின் மகன் பெனடிக் ஆகிய குழந்தைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டனர்.



**சகோதரர் மோகன் & சகோதரி ரேச்சலின் மகன் ஜாபேஜ் ஜீவன்**



**சகோதரர் சிம்சன் & சகோதரி எஸ்தரின் மகன் பெனடிக்**

## Dip.Th. மற்றும் B.Th. கல்வி!

மாணவர்கள் கர்த்தரின் ஊழியத்தில் திறம்பட செயல்படவும், தலைமைப் பண்புடன் பணியாற்றவும் சேப்பாக்கம் மற்றும் சந்தோஷபுரத்தில் உள்ள நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளில்** இறையியலுக்கான Diploma in Theology (Dip.Th.) மற்றும் Bachelor of Theology (B.Th.) படிப்புகள் துவங்கப்பட்டுள்ளன.



**சேப்பாக்கம் – நெகேமியா வேதாகமக் கல்லூரி மாணவர்கள்**



**சந்தோஷபுரம் – நெகேமியா வேதாகமக் கல்லூரி மாணவர்கள்**



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## பெலவீனர்களின் ஜெபத்தைக் கேட்கும் தேவன்!



கர்த்தருடைய கிருபையால் 10.08.1969 முதல் சுவிசேஷ ஊழியம் ஆரம்பித்து ஊழியப் பயிற்சியுடன் சுவிசேஷப் பிரசுர விநியோகம், ஜெபக் கூட்டங்கள் நடத்துதல், சபைகளில் செய்தியளித்தல் போன்ற ஊழியங்களைச் செய்து வந்தேன்.

நான் இளைஞனாக இருந்தபடியாலும், ஊழியத்தில் புதிய நபராக அறிமுகமானபடியாலும், என்னை ஒரு தேவ ஊழியனாக பலரும் ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை. எனவே, இந்த ஊழியப் பாதையைத் தொடருவதற்குப் பொருளாதாரம் ஒரு பெரிய தடையாக இருந்தது. இதன் விளைவாகத் தினந்தோறும் பல மைல்தூரம் கால்நடையாய் நடந்து ஊழியம் செய்ய வேண்டியதாயிற்று. பசியும், நீண்ட நடைபயணங்களும் எனது அனுதின அனுபவமாயிற்று. ஊழியம் செய்யவும், ஊழியத்திற்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதிலும் பணம் அதிகமாகத் தேவைப்பட்டது.

ஊழியம் என்ற போர்வையில் என் நண்பர், உறவினர், அயலகத்தார் போன்ற எவரிடமும் பணம் கேட்கக் கூடாது என்பதிலும், தேவன் என்னை ஊழியத்திற்கு அழைத்தபடியால் என் எல்லாத் தேவைகளையும் அவரே சந்திக்க வேண்டும் என்பதிலும் நான் அந்த நாட்களிலேயே மிகவும் உறுதியாக இருந்தேன். அந்த நம்பிக்கையில்




இதுவரை உறுதியாக நிற்கும்படி தேவன் ஒத்தாசை புரிந்துள்ளார். இந்த உறுதியைக் கடைப்பிடிக்க சொல்லி முடியாத கஷ்டங்களையும், பெரிய சவால்களையும் சந்தித்தேன். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இனிமேல் சமாளிக்கமுடியாது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டேன். மனரீதியிலும், உடல்ரீதியிலும் அதிகமாக பாதிக்கப்பட்டு சுகவீனம் அடையும் நிலைக்கு சென்றுவிட்டேன். என் உறவினராக இருந்த திரு. சொர்ணராஜ் அவர்கள் அரசு போக்குவரத்துத் துறையிலும், பாலப்பள்ளம், மத்திகோடில் வாழ்ந்த சகோ. காலின்ஸ் என்ற தேவஊழியர் தனியார் நிறுவனங்களிலும் என் வேலைக்காக முயற்சித்தனர். அவர்கள் வெற்றி பெறவில்லை.

இப்படி இருக்கையில் 17.05.1971 அன்று நான் உபவாசத்துடன் பகல் முழுவதும் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது தேவனுடைய ஆவியானவர் என் மேல் பிரத்தியட்சமாய் இறங்கினார். ஓர் நிரந்தரமான வேலை கிடைக்க ஜெபிக்கும்படி தேவ ஆவியானவர் ஏவினார்.

நான் ஜெபிக்கும்போது "ஒரு மாத காலத்திற்குள் ஒரு நிரந்தரமான வேலையைத் தருவேன்; அதை வைத்துப் பிழைத்துக்கொள்" என்கிற விசுவாச உணர்வைப் பெற்றேன். **நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.** 1 யோவான் 5:14,15. இதன்படி ஜெபத்தில் நீங்கள் கேட்டவற்றையெல்லாம் பெற்றுக் கொண்டோம் என்று அறிந்து கொள்ளுங்கள் என்கிற வசனத்தை விசுவாசித்து அதை உறுதியாய்ப் பற்றிக் கொண்டு, புதிய வேலை ஒன்று எனக்குக் கிடைத்ததாக அறிந்ததைப் போல், அதனை செய்வதற்காக முன் ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தேன். என் நடவடிக்கைகளைப் பார்த்த பலர் என் மனநிலையை சந்தேகிக்க ஆரம்பித்து விட்டனர். நான் அவர்களைப் பாராமல் ஆண்டவரை முழுமையாக விசுவாசித்தேன்.

நாட்கள் கடந்து சென்றன. ஒவ்வொரு நாளும் முழு நிச்சயத்துடன் தபால் காரரை எதிர்நோக்கிக் காத்திருந்தேன். சரியாக, ஒரு மாதம் கடந்தமறுநாள் அதாவது, சரியாக 18.6.1971 அன்று நான் ஆண்டவர் மேல் உள்ள விசுவாசத்துடன் தபால் நிலையத்துக்கு நேராகச் சென்றேன்.

என்னைப் பார்த்ததும், தபால்காரராக இருந்த திரு. நெல்லையப்பன் தபால் எதுவும் இல்லை என்று கை சைகை மூலம் கூறிவிட்டார். நான் சற்றும் மனந்தளராமல் ஆண்டவரையும், அவருடைய வாக்குத்தத்தத்தையும் உறுதியாய்ப் பற்றிக்கொண்டு அங்கேயே உட்கார்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன்.





என்ன ஆச்சரியம்? சற்று நேரத்தில் அதே தபால்காரர், "சாம், உங்களுக்கு ஒரு பதிவுத் தபால் வந்திருக்கிறது. கையெழுத்திட்டு பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.





**1994–ம் ஆண்டு அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெறும்போது தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் திரு. ஏ. செண்பகம் B.E., மற்றும் என்னுடன் பணிபுரிந்தோர்கள்**



**1994–ல் வேலையை விட்டு விலகும்போது என்னுடன் பணிபுரிந்தவர்களுடன்**

அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தால், தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அலுவலகத்திலிருந்து, தொழிலாளர் துறையில் பணி நியமன உத்தரவு அதில் இருந்தது. எப்போதோ சில வருடங்களுக்கு முன் நான் எழுதிய தேர்வுக்கான முடிவு ஊக்கமான ஜெபத்தால் துரிதப்படுத்தப்பட்டு, அற்புதம் நடந்தது. ஜெபம் ஓர் அற்புதமான ஆவிக்குரிய ஆயுதம்.

மிக சந்தோஷத்துடன் சென்னை வந்து, அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்து, அதன் மூலம் வந்த சம்பளத்தின் பெரும் பகுதியை ஊழியத்தில் முதலீடு செய்து, ஆண்டவருடைய ஊழியங்களைச் செய்ய ஆண்டவர் எனக்கு உதவி செய்தார். கர்த்தரின் கிருபையாலும், அதிகாரிகளின் தயவினாலும் அரசுப்பணியுடன் எனது ஊழியத்தையும் தொடர அரசாங்கம் சிறப்பு அனுமதி வழங்கியது.

இதே அரசுப்பணியை விட்டு விலகி முழுநேரமாக தேவப்பணி செய்ய, தேவன் 1994–ஆம் ஆண்டு கட்டளையிட்டதின் பேரில், அதனை உடனடியாக இராஜினாமா செய்து விட்டு முழுநேர தேவப்பணி செய்து வருகிறேன்.

நம் கர்த்தர் இயேசு நல்லவர். காலம் தவறாதவர்! அவரை உறுதியாய் நம்பிப் பற்றிக் கொள்ளுங்கள்!! உங்களுக்கும் வெற்றி கிடைக்கும்!!! அவர் இன்று உங்களை உற்று கவனிக்கிறார்.

**உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்.** ஏசாயா 26:3.

*************

... 6–ம் பக்கத் தொடர்ச்சி

பிரசங்கிமார்கள் பெரும்பாலும் சபைகளில் குறைகளைச் சுட்டிக்காட்ட பயந்து தங்கள் சபைகளிடத்தில் வேத சத்தியங்களைப் பேசுவதைத் தவிர்க்கிறார்கள். இதன் விளைவாக, சமரசங்கள் ஒவ்வொரு மட்டத்திலும் காணப்படுகின்றன.

... **மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது** என்று அப்போஸ்தலர் 5:29–ல் பேதுரு அறிவித்தபோது அவர் காட்டிய துணிச்சலைக் கண்டு நான் அடிக்கடி வியப்படைகிறேன். ஆனால், இன்று எத்தனை தலைவர்களும், விசுவாசிகளும் அத்தகைய அறிக்கையைச் செய்யத் தயாராக இருக்கிறார்கள்? எல்லா முரண்பாடுகளையும் எதிர்த்து நிற்க நமக்கு தைரியம் இருக்கிறதா? என்பதே கேள்வி. இந்த நபரையோ அல்லது இந்த முடிவையோ நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஏனெனில் அது கர்த்தரின் வார்த்தைக்கு எதிரானது என்று நாம் தைரியமாகச் சொல்ல முடியுமா?

இந்தக் கடைசி நாட்களில் நம்மைச் சுத்தவான்களாகக் காத்துக் கொள்ள தேவன் நம்மை அழைக்கிறார்.

அன்பான நண்பர்களே, நம் வாழ்க்கையைப் பாதுகாக்க அறிவுறுத்தும் ஏழு பகுதிகளைப் பற்றி நாம் சிந்தித்தோம். நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், அவருடைய வார்த்தையில் உறுதியாக நிற்கவும் தேவன் நமக்கு ஞானத்தையும், தைரியத்தையும் தருவார் என்று நான் ஜெபிக்கிறேன். ஏனென்றால் அவருடைய வருகை மிகவும் சமீபமாக உள்ளது.

கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

*************

## அறிவிப்பு

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களை யும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

– ஆசிரியர்

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### வேதாகமத் தபால் கல்வி

இந்திய மாணாக்கர்களுக்கு

**தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.**

**"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.**

மேலும் விவரங்களுக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி

10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005. தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

கைபேசி: (+91) 98410 71852, 95661 31858 மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### 1. Bank : State Bank of India

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | S. Sam Selva Raj |
| A/C No. | : | 1023 2934 679 |
| IFSC | : | SBIN 00 00 249 |
| SWIFT CODE | : | SBI NIN BB 455 |

### 2. Bank : ICICI Bank

| | | |
|---|---|---|
| Branch | : | Anna Salai, Chennai-6 |
| Name | : | Echo of His Call |
| A/C No. | : | 6038 0502 2319 |
| IFSC | : | ICIC 000 6038 |

### 3. Bank : State Bank of India

(This Account is for Tax Exemption for Indians only )

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | Echo of His Call Educational Trust |
| A/C No. | : | 1023 2923 805 |
| IFSC | : | SBIN 00 00 249 |

Google Pay: 98410 71858
PayPal : SAM SELVA RAJ

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

☆ **வருட சந்தா ரூ. 100/–** ☆ **ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல் : (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 29th SEPTEMBER 2025**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**